

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 47 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜனவரி 2016




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்


பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1920

மறைவு *2015*

உயிருடன் இருங்கள்
உணர்வுடன் இருங்கள்
விழிப்புடன் இருங்கள் எதையும் வெல்வோம்

என்று சொன்ன தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர் மூத்தப் பொறியாளர் எஸ். கணபதி அவர்களின் மறைவிற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 5 (2015 - 2016)



# தொடரும்

# நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

பொறியாளர் சகோதர சகோதரிகள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

கடந்த ஆண்டு பல்வேறு எதிர்ப்புகளை, சந்தித்து பல சாதனைகளை மௌனமாக செய்திருக்கிறோம். 2015 ஆம் ஆண்டு நான்கு விதித்திருத்த மற்றும் விதித்தளர்வு அரசாணைகள் பெற்றிருக்கிறோம். நியாய, தர்மங்களை மட்டுமே பக்க பலமாக கொண்டு செயல்பட்டு வருகிறோம். தொடர்ந்து வெற்றி பெறுவோம். 2016 ஆம் ஆண்டும் நமக்கு நல்ல ஆண்டாக அமையும் என்று உறுதியாக நம்புவோம்.

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கும் கோப்புகளை விரைந்து முடிக்க போராட்டங்களை அறிவித்திருந்தோம்.

மரியாதைக்குரிய பொதுப்பணித்துறை முதன்மை செயலாளர் அவர்கள் நமது கோரிக்கைகளை விரைந்து முடித்து தருவதாக கூறியிருக்கிறார்கள்.

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் டிசம்பர் 31 - ந் தேதிக்குள் பெரும்பாலான கோப்புகளை முடித்து தருவதாக உறுதி அளித்துள்ளார்.

முதற்கட்டமாக 23 சிவில் தொழில்நுட்ப உதவியாளர், 3 மின்னியல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் பணிஆய்வாளர் உள்ளிட்ட பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதற்கிடையில் மேற்கண்ட ஆணையை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அனைத்து தலைமைப் பொறியாளர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார். இது சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். விரைவில் பிரச்சினை முடிவுக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து பட்டயம் முடித்த பணிஆய்வாளர்களுக்கு வரைவாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பும் விரைவில் முடிவடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்


**D. முருகேசன்,** பொதுச் செயலாளர் செல்பேசி எண் 9444 999 588 988 444 98 97

E.mail: d.murugavelsivan@gmail.com


சென்னை கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்






ABSTRACT

Rules – Tamil Nadu Engineering Subordinate Services – Public Works Department – Redesignation of the post of Supervisor as Junior Engineer – Amendments to Special Rules – Issued

Public Works (D1) Department

G.O. (Ms) No. 208

Dated 12.11.2015

மன்மத, ஐப்பசி – 26

திருவள்ளுவர் ஆண்டு, 2046

Read:

1. G.O. (Ms.) No. 294, Public Works Department, dated 22.02.1977
2. G.O. (Ms.) No. 3037, Public Works Department, dated 22.12.1986
3. From the Chief Engineer (General), Public Works Department, letter no. E3(1)/82362/92-2, dated 20.10.1994.
4. From the Secretary, Tamil Nadu Public Service Commission, Letter No. 1732/RND-C4/2009, dated 27.10.2015.

ORDER:

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

NOTIFICATION

In Exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering subordinate service (Section 8 in Volume III of the Tamil Nadu Services Manual, 1970).

2 (1). The Amendment 1 hereby made shall be deemed to have come into force on the 22nd February 1977.

(2). The Amendments 2(a), 2 (c) and 3 hereby made shall be deemed to have come into force on the 22nd December 1986.

(3). The Amendment 2 (b) hereby made shall come into force on the date of issue of this order.

AMENDMENTS

In the said Special Rules,-

1. For the expression "supervisor" wherever it occurs, the expression "Junior Engineer" shall be substituted;

2. In Part I, in rule 2, -

(a) In sub – rule (a), in the first proviso for the existing entry "supervisor (Category 1)" in Column (1) and the Corresponding entry in column (2), Under the heading "Branch I – Engineering Branch", the following entries shall respectively be substituted namely:-

| | |
|---|---|
| "Junior Engineer (Category 1) | Promotion from the posts of overseer or Technical Assistant or Draughting Officer"; |

(b) Sub – rule (b) and (d) shall be omitted;

(c) Sub- rule (c) shall be omitted;

3. In part II, under the heading "Branch I – Engineering Branch", in rule 2, in sub – rule (a) for the expression "Promotion from Overseers or Technical Assistants or Draughting Officers" occurring in column (2) against the category "Junior Engineer" in Column (1), as so substituted, the expression "Promotion from Overseers, Technical Assistants and Draughting officers" shall be substituted.

(BY ORDER OF THE GOVERNOR)

N.S. PALANIAPPAN,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தர்மபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் வி.ராஜ்குமார், உதவிப்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ 1250/- (ஆயிரத்து இருநூற்றைம்பது மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**ABSTRACT**

Rules – Tamil Nadu Engineering Subordinate Service – Public Works Department – Implementation of One Unit System for Draughtsman categories – Amendments to Special Rules - Issued

Public Works (D1) Department

G.O. (Ms) No. 209 Dated 12.11.2015

மன்மத, ஐப்பசி – 26

திருவள்ளுவர் ஆண்டு, 2046

Read:

1. G.O. (Ms). No. 1425, Public Works Department, dated 04.11.1978.
2. From the Engineer- in- Chief (Buildings), Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department Letter No. S1(3)/27875/2007, dated 18.11.2013 and 10.1.2014

ORDER:

The Following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

NOTIFICATION

In exercise of the powers conferred by the Proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Subordinate Service (Section 8 in Volume III of the Tamil Nadu Services Manual, 1970).

2. The Amendments hereby made shall be deemed to have come into force on the 1st September 1978.

AMENDMENTS

In the said Special Rules:-

1. in part I, in rule 2, in sub-rule (a) in the first proviso, under the heading "Branch I – Engineering Branch", for the entry in Column (2) against "Head Draughtsman [Chief Engineer's office (category 3)]" in column (1) the entry "Promotion from Civil Draughtsman I Grade" shall be substituted;

2. in part II, under the heading "Branch I – Engineering Branch", -

(a) in rule 1, for the entries in category "4(a) and (b)", the following entries shall be substituted, namely:-

" 4(a) (i) Civil Draughtsman – I Grade
(ii) Civil Draughtsman – II Grade
(III) Civil Draughtsman – III Grade"

(b) aftter item 4(a) as so substitued, the expression 4(c) shall be renumbered as 4(b) wherever it occurs;

(c) in rule 2,

(i) in sub – rule (a), for the entries "category 4(a) and (b) Civil Draughtsman I Grade", "Civil Draughtsman II Grade", "Civil Draughtsman III Grade" in column (1), the entries "categories 4(a)(i) Civil Draughtsman I Grade", "(ii) Civil Draughtsman II Grade", and "(iii) Civil Draughtsman III Grade", shall respectively be substitued;

(ii) Category "4(a) (iii) Civil Draughtsman III Grade" as so substitued, the entries "A post in any Grade in the Consulting Architect's Section of the office of the Chief Engineer (General) may be filled from among the Civil Draughtsman of the Corresponding grade in any other section or office", shall be omitted;

(iii) in sub – rule (b), for the expression "category 4(a) and (b)", the expression "Category 4(a) (i), 4(a) (ii) and 4 (a) (iii)" shall respectively be substitued;

(d) in the "TABLE" in rule 5, for the expression "3. Civil Draughtsmen in the Consulting Architects's section and elsewhere" in column (1), the expression "3. Civil Draughtsmen" shall be substituted.

(BY ORDER OF THE GOVERNOR)

N.S. PALANIAPPAN,

PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## வேண்டுகோள்

அன்பார்ந்த பொறியாளர் நண்பர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். 2015-2016 ஆம் ஆண்டிற்கு செயலாளர் வெளியீடு பதவிக்கு என்னை தேர்ந்தெடுத்த அத்தனை உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

2016 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி மற்றும் நாட்சுவடிகள் அனைத்து கிளைகளுக்கும் குறித்த காலத்தில் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் நாட்காட்டி மற்றும் நாட்சுவடிகளுக்கான சந்தாத் தொகையினை கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் விரைந்து உறுப்பினர்களிடமிருந்து பெற்று மையச் சங்கத்திற்கு செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

- ச.கு. கருப்புசாமி

செயலாளர் (வெளியீடு)

ABSTRACT

Rules – Tamil Nadu Engineering Subordinate Service – Public Works Department – Redesignation of Draughtsman categories – Amendments to Special Rules – Issued.

Public Works(D1) Department

G.O. (Ms) No.210 Dated 12.11.2015

மன்மத, ஐப்பசி – 26

திருவள்ளுவர் ஆண்டு, 2046

Read:

1. G.O. (Ms.) No.710, Finance Department, dated 10.7.1960
2. Memorandum No.7644, Public Works Department, dated 16.12.1960.
3. G.O. (Ms.) No. 1427, Public Works Department, dated 24.8.1981
4. G.O. (Ms.) No. 1540, Public Works Department, dated 19.9.1981
5. G.O. (Ms.) No. 2314, Public Works Department, dated 24.11.1982
6. G.O. (Ms.) No. 3037, Public Works Department, dated 22.12.1986
7. From the Engineer-in-Chief, Water Resources Organisation and Chief Engineer (General), Public Works Department Letter No.S1(3) / 35615/ 2006, dated 17.4.2007.
8. From the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer(Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department Letter No.S1(3) /27875/2007, dated 18.11.2013.

**ORDER:**

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

**NOTIFICATION – I**

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Subordinate Service (Section 8 in Volume III of the Tamil Nadu Services Manual, 1970).

2 (1). The amendments 1(a) and 2(a) hereby made shall be deemed to have come into force on the 10$^{th}$ July 1960.

(2) The amendments1(c), 1(d), 2(b), 2(c), 2(d),2(d), (2(f) and 2(h) hereby made shall be deemed to have come into force on the 24$^{th}$ August 1981.

(3) The amendment 1(b) and 2(e) hereby made shall be deemed to have come into force on the 19$^{th}$ September 1981.

## AMENDMENTS.

**In the said Special Rules:-**

1. in Part I, in rule 2, in sub-rule (a),-

a) under the heading "Branch I-Engineering Branch", for the expression "Head Draughtsman (Chief Engineer's Office) (category 3)" in column (1), the expression "Special Grade Draughtsman" shall be substituted;

b) for the expression "Special Grade Draughtsman" as so substituted, the expression "Special Grade Technical Officer" shall be substituted;

c) for the expression "Civil Draughtsman I Grade" in column (2) against the entry "Special Grade Technical Officer" as so substituted, the expression "Senior Technical Officer" shall be substituted;

d) for the expression "Draughtsman Grade III" in the second proviso, the expression "Junior Technical Officer" shall be substituted;

2. in Part II, under the heading "Branch I – Engineering Branch",

a) for the expression "Head Draughtsman" wherever it occurs, the expression "Special Grade Draughtsman" shall be substituted;

b) for the expression "Draughtsman I Grade" or "Draughtsman Grade I" or "Civil Draughtsman I Grade" or "Civil Draughtsman Grade I", wherever it occurs, the expression "Senior Technical Officer" shall be substituted;

c) for the expression "Draughtsman II Grade" or "Draughtsman Grade II" or "Civil Draughtsman II Grade" or "Civil Draughtsman Grade II", wherever it occurs, the expression "Technical Officer" shall be substituted;

d) for the expression "Draughtsman III Grade" or "Draughtsman Grade III" or "Civil Draughtsman III Grade" or "Civil Draughtsman Grade III", wherever it occurs, the expression "Junior Technical Officer" shall be substituted;

e) for the expression "Special Grade Draughtsman", wherever it occurs, the expression "Special Grade Technical Officer" shall be substituted;

f) in rule 2, in sub-rule (a), for the expression "Civil Draughtsman" wherever it occurs in the first and second proviso, against category "4(a) (iii) Junior Technical Officer" as so substituted under rule 2(a), the expression "Junior Technical Officer" shall be substituted;

g) in rule 3, for the expression "Draughtsman", the expression "Junior Technical Officer" shall be substituted;

h) in Schedule II,-

i) for the expression "Draughtsman" occurring in the first proviso in column (2) against the entry "Junior Engineer" in column (1), the expression "Junior Technical Officer" shall be substituted.

ii. for the expression "Draughtsman" occurring in the first and second proviso in column (2) against the entry Special Grade Technical Officer in the office of the Chief Engineers, Senior Technical Officer, Technical Officer, Junior Technical Office" in column (1), the expression "Special Grade Technical Officer, Senior Technical Officer, Technical Officer and Junior Technical Officer" shall be substituted.

NOTIFICATION – II

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Subordinate Service (Section 8 in Volume III of the Tamil Nadu Services Manual, 1970).

2(1). The amendments 1(a), 1(b), 1(c) and 2(a) hereby made shall be deemed to have come into force on the 24th November 1982.

(2). The amendments 2(b) hereby made shall be deemed to have come into force on 22nd December 1986.

AMENDMENTS.

In the said Special Rules,-

1. in Part I, in the rule 2, in sub-rule (a), in the first proviso,-

a) under the heading "Branch I-Engineering Branch", for the expression "Special Grade Technical Officer" in column (1), the expression "Special Grade Draughting Officer" shall be substituted;

b) for the expression "Senior Technical Officer" in column (2), the expression "Senior Draughting Officer" shall be substituted;

c) for the expression "Junior Technical Officer" in the Second proviso, the expression "Junior Draughting Officer" shall be substituted.

2. in Part II, under the heading "Branch I – Engineering Branch",-

a) for the expressions "Special Grade Technical Officer", Senior Technical Officer", Technical Officer", "Junior Technical Officer", wherever they occur, the expressions "Special Grade Draughting Officer", Senior Draughting Officer", "Draughting Officer", Junior Draughting Officer", shall respectively, be substituted;

b) in rule 12, for the expression "Draughtsman", the expression "Junior Draughting Officer, Draughting Officer, Senior Draughting Officer including Assistant Draughtsman" shall be substituted;

(BY ORDER OF THE GOVERNOR)

N.S. PALANIAPPAN,

PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

# பிப்ரவரி 2015 மாத பொறியாளர் இதழில் இருந்து

கடித எண். 001 / பொ.செ. - பொ.ச. / 2015-68 நாள்: 03.02.2015

பெறுநர்

மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும்

பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,

தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

**பெருமதிப்பிற்குரியீர்,**

**பொருள்:** தமிழ்நாடு பொதுப்பணித்துறை - நிறுவனம் - அரசாணை எண். 1 பொதுப்பணித்துறை நாள்: 02.01.1990 - தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணிகளுக்கான திருத்தம் - எதிர்ப்பு தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண். 1 (பொ.ப.து.) நாள் 02.01.1990.

தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி (TNES) மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதி (TNESS)களுக்கான சிறப்பு விதிகளில் 3:1 என்ற விகிதத்தில் பட்டப் பொறியாளர்கள் உதவிப் பொறியாளர்களாகவும், பட்டயப் பொறியாளர்கள் இளநிலைப் பொறியாளர்களாகவும், பிரிவு நிலையில் நியமிக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி சிறப்பு விதிகளின்படி, பணியில் இருக்கும்பொழுது பட்டப் படிப்பு முடித்த தலைமை வரைவாளர் மற்றும் வரைவாளர் நிலை 1 (தற்பொழுது முதுநிலை வரைதொழில் அலுவலர்) ஆகிய பதவிகளே உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கான ஊட்டுப் பதவிகளாக (Feeder Category) வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கான விதித்திருத்தம் அரசாணை எண். 31 பொ.ப.து. நாள் 06.01.1983 ல் வெளியிடப்பட்டுள்ளது).

பொதுப்பணித்துறையில் உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிக்கு ஊட்டுப் பதவிகளாக வரை தொழில் அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஓவர்சியர் ஆகிய மூன்று பதவிகளுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது. அரசாணை எண். 3037 பொதுப்பணித்துறை நாள். 22.12.1986ன் படி தொழில்நுட்ப உதவியாளர் பதவி, இளநிலைப் பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியாகும் என்று தமிழ்நாடு பொறியாளர் சார்நிலைப் பணித்தொகுதிக்கு விதித்திருத்தம் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுதுள்ள தமிழ்நாடு பொறியியல் பணி விதிகளின் படி உதவிப் பொறியாளர் பதவிக்கான பணிநியமனங்களில் பட்டப் பொறியாளர்கள் நேரடி நியமனம் முதலாவது முறையாகவும், பணிமாற்றல் மூலமான நியமனம் கடைசி முறையாகவும் பின்பற்றப்படுகின்றன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி தேர்வு நியமன முறையின் படி பட்டம் பெற்ற பொறியாளர்கள் எழுத்துத் தேர்வு (பொறியியல் பாடம் மற்றும் பொது அறிவு), நேர்முக தேர்வு ஆகியவற்றின் தேர்வு பெற்று பின் தமிழக அரசின் சமூக நீதி கொள்கையான இட ஒதுக்கீட்டின் (Communal Reservation) அடிப்படையில் உதவிப் பொறியாளர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், விதிகளுக்கு முற்றிலும் புறம்பாக அரசாணை எண். 1 பொ.ப.து நாள் 02.01.1990ன் படி, இளநிலைப் பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியான தொழில்நுட்ப உதவியாளர் பதவியை உதவிப் பொறியாளர்களின் ஊட்டுப் பதவியாக பணிமாற்றல் மூலம் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவிக்கு பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யும்போது அரசின் இட ஒதுக்கீடு கொள்கை முற்றிலும் பின்பற்றப்படுவதில்லை.

மேற்படி அரசாணையின் மூலம் பட்டப் பொறியாளர்களின் பணி நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுவதானால், எங்கள் சங்கம் ஆரம்பத்திலிருந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. மேற்படி அரசு ஆணைக்கு இது காணும் துறை விதிகளில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. இருப்பினும், விதிகளுக்கு புறம்பாக பல்வேறு காலகட்டங்களில் உதவிப் பொறியாளர்களாக மேற்படி அரசாணை எண். 1ன் மூலம் பணி மாற்றல் மூலம் பணி நியமனங்கள் நடைபெற்று வருகின்றன.

இப்படி விதிமுறைகளை மீறி நியமனம் செய்வதை நிறுத்திட வேண்டி நாங்கள் முதன்மை தலைமைப் பொறியாளர், அரசு செயலர் பொதுப்பணித்துறை அவர்களிடம் பல்வேறு கால கட்டங்களில் எங்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளோம். எனினும் பல்வேறு சூழ்நிலைகளில் பட்டப் பொறியாளர்கள் உரிமையினை பாதிக்கும் வகையில் தொழில்நுட்ப பணியாளர்கள் பணி மாறுதல் மூலம் உதவிப் பொறியாளர்களாக நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 6744 / 2014 தொடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நியமனங்களின் மூலம் பட்டப் பொறியாளர்களின் பணி நலன்கள் கீழ்கண்டவாறு பாதிக்கப்படுகின்றன.

I. மேற்படி பணிமாறுதல் மூலம் தொழில்நுட்ப பணியாளர்கள் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கும் பொழுது அரசின் சமூக நீதிக் கொள்கையான இட ஒதுக்கீடு (Communal Reservation) பின்பற்றப்படுவதில்லை. இதனால், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டம் பெற்ற உதவிப் பொறியாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

ii. தமிழகத்தின் தற்பொழுதுள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் சுமார் 50,000 பேர் வருடா வருடம் சிவில் இன்ஜினியரிங் பிரிவில் பட்டம் பெற்று வேலை வேண்டிக் காத்துக் கொண்டுள்ளனர். இச்சூழலில் இதுபோன்ற பணிநியமனங்கள் பட்டதாரி பொறியாளர்களின் அடிப்படை நலன்களையும், நியாயமான உரிமைகளையும் பறிப்பதாகும்.

III. பகுதி நேர பட்டம் பெற்று பணி மாற்றல் மூலம் எவ்வித தேர்வுமின்றி உதவிப் பொறியாளர்களாக பணி நினமனம் பெறுவதனால், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் பெறும் உதவிப் பொறியாளர்களின் முதுநிலை முற்றும் பாதிக்கப்படும்.

IV. பட்டப் பொறியாளர்களுக்கே உரித்தான பணி விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள 3:1 என்ற பணி நியமன விகிதாச்சாரம் முற்றிலுமாக மீறப்படுகின்றது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் கடந்த 27.11.2013 அன்று வழங்கிய தீர்ப்பில், பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலை பொறியாளர்கள் உதவிப் பொறியாளர் பதவி பெயர்

மாற்றம் பெற்றுக் கொள்ளலாம் எனவும், உதவிப் பொறியாளர் பதவிக்கான ஊதியம் பெற்றுக் கொள்ளலாம் எனவும், ஆனால் இளநிலைப் பொறியாளருக்குரிய 25% விகிதாச்சாரத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெறுவதுதான் சரியாக இருக்கும் என கருத்து தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி, உச்சநீதிமன்ற கருத்திற்கிணங்க, அரசாணை எண்.66 பொ.ப.து. நாள் 12.3.2007ஐ, எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதியின் கீழ்வரும் இளநிலைப் பொறியாளர்கள் பட்டம் பெற்று உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் பெற்றுக் கொண்டாலும், இளநிலைப் பொறியாளர்களுக்குரிய முதுநிலையிலேயே வைக்கப்பட வேண்டும் என்றும், இளநிலை உதவிப்பொறியாளர்களுக்குரிய 25% விகிதத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும் எனவும், தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதியில் கீழ் வரும் உதவிப் பொறியாளர்களின் 75% விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட கூடாது எனவும் ஆணையிட்டுள்ளனர்.

இளநிலைப் பொறியாளர் பதவிகளுக்கு ஊட்டுப் பதவிகளான தொழில்நுட்ப உதவியாளர் பணியிடம், உதவிப்பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியாக ஆணையிட்டு வழங்கிய அரசாணை எண்.1 பொ.ப.து.நாள் 02.01.1990, மேற்கூறிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மற்றும் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு முற்றிலும் புறம்பானது.

எனவே, மேற்கூரிய காரணங்களை கருத்தில்கொண்டு, பட்டப் பொறியாளர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்திட தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதி விதிகளுக்கு விதித்திருக்கும் வழங்கக்கூடாது எனவும் இதற்கு மூலக் காரணமாக இருக்கும் அரசாணை எஎ்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ஐ முழுவதுமாக ரத்து செய்யுமாறும் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை மிகப்பெரிதும் வேண்டுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

பொறி. பெ.கார்த்திக்கேயன்,
பொதுச்செயலாளர்/உதவிப்பொறியாளர் சங்கம்

பொறி. ர. ரவிராஜ்,
பொதுச்செயலாளர்/பொறியாளர் சங்கம்

**நகல் :** அரசு முதன்மை செயலாளர், பொதுப்பணித்துறை,தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களின் கனிவான கவனத்திற்கும், மற்றும் தக்க நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகல் :** முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5. அவர்களின் கனிவான கவனத்திற்கும், மற்றும் தக்க நடவடிக்கைக்கு சமாப்பிக்கப்படுகிறது.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் முன்னாள் செயலாளர் பொறியாளர் N.நாகராஜன் உதவிச்செயற்பொறியாளர் அவர்களின் தந்தையார் V.நாராயணசாமி அவர்கள் 09.12.2015 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# சகோதர சங்கத்தின் அத்துமீறல்

தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் பட்டயப் பொறியாளர்களுக்கு எதிராக செயல்பட்டதற்காகவும், தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிறைய கோப்புகள் தேங்கிக் கிடப்பதை கண்டித்தும் பொறியியல் கதிரில் எழுதியிருந்தோம். அதற்காக டிசம்பர் மாத பொறியாளர் இதழில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு கண்டனம் தெரிவித்து பொறியாளர் சங்க சகோதரர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அதில் பொறியாளர் சங்கத்தினை பற்றி தரக்குறைவாக, அநாகரீகமாக எழுதியிருப்பதாக ஒரு தவறான தகவலை தெரிவித்திருக்கிறார்கள். பொறியாளர் சங்கத்தைப் பற்றி தரக்குறைவாக, அநாகரீகமாக எழுதியதாக நமக்கு தெரியவில்லை.

மேலும் பொறியாளர் சங்கம் அனைத்து சகோதர சங்கங்களையும் ஒருங்கிணைத்து நல்ல முறையில் செயல்பட்டு வருவதாக எழுதியிருக்கிறார்கள். இதைப் படித்தவுடன் வேதனை கலந்த சிரிப்புதான் வருகிறது. பட்டயப் பொறியாளர்களையும், பகுதி நேர பட்டம் பயின்றவர்களையும் ஒழித்து கட்டுவது மட்டுமே தங்கள் பிரதான கொள்கையாக கொண்டு பொறியாளர் சங்கம் செயல்படுவது ஊரறிந்த உண்மை. பட்டியலிட்டால் நீளும்.

பகுதி நேர பட்டம் பயின்ற இறந்து போன பொறியாளர் சதுரகிரிக்கு எதிராக வழக்கு தொடுத்து குடும்ப பென்சனை (Family Pension) கூட குறைத்தது பொறியாளர் சங்கத்தின் சகோதரத்துவத்திற்கு எடுத்துக்காட்டு.

முப்பது ஆண்டுகள், முப்பத்தைந்து ஆண்டுகள் துறையில் பணிபுரிந்து உதவி செயற்பொறியாளர் என்ற ஒரே ஒரு பதவி உயர்வு மட்டும் பெற்று உடனே பணி ஓய்வு பெற இருக்கும், பட்டப் பொறியாளர்களுக்கு எந்த விதத்திலும் போட்டி இல்லாத பகுதி நேர பட்டப் படிப்பு படித்த பொறியாளர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கக் கூடாது என்று தடுப்பது பொறியாளர் சங்கத்தின் சகோதரத்துவத்திற்கு எடுத்துக்காட்டு.

துறையில் பல ஆண்டுகள் பணிபுரிந்து தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் இருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை மீண்டும் தொழில் நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று பல்வேறு வழக்குகளை தொடுத்திருப்பது பொறியாளர் சங்கத்தின் சகோதரத்துவத்திற்கு எடுத்துக்காட்டு.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தமிழ்நாடு பொறியியல் சங்கம் அனைத்து பொறியாளர்களையும் சகோதரர்களாக நினைத்து யாருக்கும் சிறு தீங்கு கூட செய்யாமல் தன்னுடைய வேலையை மட்டும் செய்து கொண்டிருக்கிறது.

தலைமைப் பொறியாளர் (பொது) பதவியில் இருப்பவர்கள் ஒரு நீதிபதி போல் நடுநிலையாக செயல் பட வேண்டியவர்கள், எல்லோருக்கும் பொதுவானவர். பாரபட்சமுடன் எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு தீங்கு விளைவிக்கும் போது கண்டிப்பதும், எதிர்ப்பு தெரிவிப்பதும் எங்கள் உரிமை. நியாயமாக நடக்கும் போது நாங்கள் பாராட்ட தவறுவதில்லை.

இந்த விஷயம் பற்றி பேச பொறியாளர் சங்கத்திற்கு உரிமை இல்லை. தேவையில்லாத விஷயத்தில் நமது சகோதர சங்கம் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறியாளர் சங்கத்தின் இந்த செயல் "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பதை போல் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் பொறியாளர் சங்கத்திற்கு சாதகமானவர் என்றும் பட்டயப் பொறியாளர்களுக்கு எதிராக செயல்பட்டால் தவறு இல்லை என்றும் பறைசாற்றுவது போல் உள்ளது.

நாகரீகம் என்பது வெறும் வார்த்தைகளிலோ, எழுத்துக்களிலோ இல்லை. நாகரீகம் என்பது நேர்மையான, உயர்ந்த செயல்களில்தான் இருக்கிறது.

இறுதியாக "மேலும், இது போன்ற நடவடிக்கை தொடருமானால் பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம் மிகக் கடுமையான எதிர்ப்புகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று எச்சரிக்கை செய்கின்றோம்" என்று மிரட்டல் விடுக்கும் தொனியில் எழுதியிருப்பது வருத்தமளிக்கிறது. இனி வருங்காலங்களில் பொறியாளர் சங்க சகோதரர்கள் இவ்வாறு வன்முறையை துண்டும் வகையில் எழுதுவதை தவிர்ப்பது நல்லது.

த. முருகேசன்
பொதுச்செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:662 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 31.12.2015)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | A. தெட்சிணாமூர்த்தி | கண்காணிப்புப் பொறியாளர்(மின்) |
| 2. | K.P. சுப்பிரமணியன் | செயற்பொறியாளர் |
| 3. | P. லோகராஜன் | செயற்பொறியாளர் |
| 4. | A. பூச்சந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 5. | G. விஜயன் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | S. கஸ்தூரிபாய் | உதவி கட்டடக் கலைஞர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா.ச.பழனியப்பன்**
அரசு முதன்மைச் செயலாளர்

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொபது., அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5.

முன்னிலை: பொறி. சு. திருமாறன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.,

செயல்முறை ஆணை எண். எஸ்.4(2)/58322/2011/ நாள் 18.12.2015

பொருள்: பணியமைப்பு – த.நா.பொ.சா.நி.ப.தொகுதி – பணி ஆய்வாளர் தரம்-2 மற்றும் தரம்-3 பதவிகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற பதவிகளிலிருந்து பதவி மாற்றம் மூலம் தொழில் நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவி பணி நியமனம் செய்து ஒதுக்கீடு ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை எண். 1972 / பொ.ப.து/ நாள் 18.11.1985
2. அரசாணை எண். 187/ பொ.ப.து / நாள் 08.08.2013
3 இவ்வலுவலக கடித எண். எஸ்.4(2)/45005/2014/ நாள் 31.10.2014.
4. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.எஸ்.4(2)/58322/2011/ நாள் 21.11.2014.

********

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி 39(அ)(1)ன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் உள்ள நபர்களுக்கு கீழ்நிலைப் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம் (By Transfer) தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு தொழில்நுட்ப உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுகிறார்கள்.

2. இவர்கள் சம்மந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர்களிடமிருந்து முறையான பதவி உயர்வு ஆணை பெற்று உடன் தொழில்நுட்ப உதவியாளராக பணியேற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. முறையான பணியமர்வு ஆணை / மறு பணியமர்வு ஆணை வழங்கப்படும் முன்னர் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் தொழில் நுட்ப பட்டயக் கல்வித் தகுதியின் மெய்த்தன்மையை ஊர்ஜிதம் செய்யவும் மற்றும் தற்போதுள்ள பதவியில் நான்கு ஆண்டு காலம் பணி முடித்துள்ளாரா என்பதையும் ஆராய்ந்து ஊதியக்கட்டு-2 ரூ.9300-34800+ தர ஊதியம் 4200 என்ற ஊதிய விகிதத்தில் பதவி மாற்றம் மூலம் தொழில் நுட்ப உதவியாளர் பணி நியமனம் ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பணிநியமனம் ஆணையில் கீழ்காணும் நிபந்தனைகள் சேர்க்கப்படுகின்றன.

அ. தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வு பாகம்-1 மற்றும் பாகம்-2 தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆ. பதவி உயர்வில் தொழில் நுட்ப உதவியாளராக செல்ல விருப்பம் இல்லையெனில், பதவி உயர்வுக்கான உரிமையை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிக நடைமுறையில் உள்ள விதிகளின்படி குறைந்த பட்ச 3 (மூன்று) ஆண்டுகளுக்கு குறையாமல் பணியேற்கும் முன்னர் துறக்க வேண்டும். அவ்வாறு பதவி உயர்வை துறக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு

பொறியாளருக்கு கீழ்கண்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பதவி துறப்பு செய்யும் நபரிடமிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய பதவி துறப்பு விண்ணப்பத்தை பெற்று ஆணை வழங்க வேண்டியது சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளரைச் சாரும். பதவி உயர்வு துறப்பு எந்த நாள் முதல் ஏற்படுகிறது என்பதை அவ்வாறு வழங்கும் ஆணையில் தெளிவுபட தெரிவிக்க வேண்டும். பதவி உயர்வு துறப்பு ஆணை வழங்கிய பின்னர் சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும்.

இ. தற்காலிக பதவி துறப்பு செய்பவர் மீண்டும் பதவி உயர்வுக்கு தங்கள் பெயர்களை பரிசீலிக்க விதிகளின்படி குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் எனவும், இந்த மூன்றாண்டு காலம் பதவி உயர்வு துறப்பு ஏற்கப்பட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் கணக்கிடப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

பதவி உயர்வு துறப்பதற்கான விண்ணப்பம்

———————————————————————— அலுவலகத்தில்

———————————— ஆக பணிபுரியும் நான் இப்பதவி உயர்வின் மீதான உரிமையை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி 47-ன்படி தற்காலிகமாக மூன்று (3) ஆண்டுகள் அல்லது நிரந்தரமாக விட்டு விட இதன் மூலம் விருப்பம் தெரிவிக்கிறேன்.

ஒப்பம் -

பதவிப் பெயர் -

பதவி -

நாள் -

5. இப்பதவி உயர்வு ஆணை சம்மந்தப்பட்ட பணியாளர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் தலைமைப் பொறியாளரால் இதுவரை முதன்மை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்பதால் இவ்வாணை வழங்கப்படுகிறது. தனியருக்கு முறையான பணி நியமன ஆணை வழங்கப்படும் முன்னர் அரசாணை எண். 368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள். 18.10.1993-ன்படி பதவி உயர்வு வழங்கப்படாததற்கு உரிய காரணம் ஏதுமிருப்பின் பதவி உயர்வு பெற தகுதியற்றவராகிறார் என்பது தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய நபருக்கு முறையான பதவி உயர்வு / மறுபணியமர்வு ஆணைகள் வழங்கக் கூடாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும் அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க தலைமைப் பொறியாளர், கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. முறையான பதவி உயர்வு / மறு பணியமர்வு ஆணைகள் பணியிலிருந்து விடுவிப்பு, பதவி உயர்வில் பணியேற்றல் அல்லது பதவி உயர்வு உரிமம் துறப்பு செய்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும், தனியர், பணியேற்ற விவரம் மற்றும் பதவி உயர்வு துறப்பு செய்த விவரம் ஆகியவற்றை உடன் இவ்வலுவகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பதவி உயர்வில் பணியில் சேராமல் அல்லது பதவி உயர்வு உரிமை துறப்பு

செய்யாமல் எந்த பணியாளர்களையும் தொடர்ந்து அப்பதவியில் நீட்டிக்கக்கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறான நிகழ்வுகளில் அவர்களது பதவி உயர்வு இரத்து செய்யப்படும் எனவும் தெரியப்படுத்தப்படுகிறது.

7. பிற்சேர்க்கையில் காணும் நபருக்கு முறையான தற்காலிக பதவி உயர்வு வழங்கப்படும் முன் இவரது கல்வித் தகுதிச் சான்று மற்றும் தொழில்நுட்ப கல்வித் தகுதி சான்றுகளை சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பி அவரது சான்றுகளை உண்மைத் தன்மை வாய்ந்ததா என்பதற்கான சான்று பெறுமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பிற்சேர்க்கை

சு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,(ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), அலுவலகம், பொபது.,,
சேப்பாக்கம், சென்னை-5.

பிற்சேர்க்கை

பதவி மாற்றம் மூலம் பல்வேறு பதவிகளிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவிக்கு ஒதுக்கீடு வழங்குதல்.

| வ.எண் | திருவாளர்கள் பெயர் / பிறந்த தேதி / பதவி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | சி. இராமு<br>16.06.1976<br>பணி ஆய்வாளர் தரம்–3 | கட்டட (க (ம) ப) உபகோட்டம், திருப்பத்தூர். | மின் உபகோட்டம், திருநெல்வேலி |
| 2 | எம். சீனிவாசன்,<br>22.09.1962<br>மின் கம்பியாளர் தரம்–2 | மின் உபகோட்டம், தஞ்சாவூர். | மின் உபகோட்டம், மருத்துவப் பணிகள் சென்னை. |
| 3 | சி. முருகானந்தம்,<br>17.07.1968<br>பணி ஆய்வாளர் தரம்–2 | கல்லணை கால்வாய் உபகோட்டம், எண்.3 பட்டுக் கோட்டை | மின் உபகோட்டம், சேலம். |

சு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,(ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
கண்காணிப்பாளர்

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5.

முன்னிலை: பொறி. சு. திருமாறன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.,

செயல்முறை ஆணை எண். எஸ்.4(2)/27376/2013/ நாள் 21.12.2015

பொருள்: பணியமைப்பு – த.நா.பொ.சா.நி.ப.தொகுதி – பணி ஆய்வாளர் தரம்–2 மற்றும் தரம்–3 பதவிகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற பதவிகளிலிருந்து பதவி மாற்றம் மூலம் தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பதவி பணி நியமனம் செய்து ஒதுக்கீடு ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை: 1. அரசாணை எண். 1972 / பொ.ப.து/ நாள் 18.11.1985
2. அரசாணை (நிலை) எண். 72/ பொ.ப (F1) துறை / நாள் 23.05.2013

**********

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி 39(a)(1)ன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் உள்ள நபர்களுக்கு கீழ்நிலைப் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம் (By Transfer) தொழில்நுட்ப உதவியாளர்களாக (சிவில்) பணி நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டு பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறார்கள்.

2. இவர்கள் சம்மந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர்களிடமிருந்து முறையான பணி நியமன ஆணை பெற்று உடன் தொழில்நுட்ப உதவியாளராக பணியேற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. முறையான பணியமர்வு ஆணை / மறு பணியமர்வு ஆணை வழங்கப்படும் முன்னர் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் தொழில் நுட்ப பட்டயக் கல்வித் தகுதியின் மெய்த்தன்மையை ஆராய்ந்து மற்றும் தற்போதுள்ள பதவியில் நான்கு ஆண்டு காலம் பணி முடித்துள்ளாரா என்பதையும் உறுதிப்படுத்தி ஊதியக்கட்டு–2 ரூ.9300–34800+ தர ஊதியம் 4200 என்ற ஊதிய விகிதத்தில் பதவி மாற்றம் மூலம் தொழில் நுட்ப உதவியாளர் பணி நியமனம் செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பணிநியமனம் ஆணையில் கீழ்காணும் நிபந்தனைகளை சேர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

அ. தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பொதுப்பணித்துறை கணக்குத் தேர்வு பாகம்–1 மற்றும் பாகம்–2 தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆ. பதவி உயர்வில் தொழில்நுட்ப உதவியாளராக செல்ல விருப்பம் இல்லையெனில், பதவி உயர்வுக்கான உரிமையை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நடைமுறையில் உள்ள விதிகளின்படி குறைந்த பட்சம் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு குறையாமல் துறக்க வேண்டும் அவ்வாறு பதவி துறக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு கீழ்க்கண்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பதவி துறப்பு செய்யும் நபரிடமிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய பதவி துறப்பு விண்ணப்பத்தை பெற்று ஆணை வழங்க வேண்டியது சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளரைச் சாரும். பதவி உயர்வு துறப்பு எந்த நாள் முதல் ஏற்படுகிறது என்பதை அவ்வாறு வழங்கும் ஆணையில் தெளிவுபட தெரிவிக்க வேண்டும். பதவி உயர்வு துறப்பு ஆணை வழங்கிய பின்னர் சம்பந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும்.

இ. தற்காலிக பதவி துறப்பு செய்பவர் மீண்டும் பதவி உயர்வுக்கு தங்கள் பெயர்களை பரிசீலிக்க விதிகளின்படி குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் எனவும், இந்த மூன்றாண்டு காலம் பதவி உயர்வு துறப்பு ஏற்கப்பட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் கணக்கிடப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

**பதவி உயர்வு துறப்பதற்கான விண்ணப்பம்**

.................................................................................................................................அலுவலகத்தில்

. . . . . . . . . . . . . ஆக பணிபுரியும் நான் இப்பதவி உயர்வின் மீதான உரிமையை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதி 47–ன்படி தற்காலிகமாக மூன்று (3) ஆண்டுகள் அல்லது நிரந்தரமாக விட்டு விட இதன் மூலம் விருப்பம் தெரிவிக்கிறேன்.

ஒப்பம் –

பதவிப் பெயர் –

பதவி –

நாள் –

5. இப்பதவி மாற்ற ஆணை சம்மந்தப்பட்ட பணியாளர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் தலைமைப் பொறியாளரால் இதுவரை முதன்மை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்பதால் இவ்வாணை வழங்கப்படுகிறது. தனியருக்கு முறையான பணி நியமன ஆணை வழங்கப்படும் முன்னர் அரசாணை எண். 368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள். 18.10.1993–ன்படி பதவி உயர்வு வழங்கப்படாததற்கு உரிய காரணம் ஏதுமிருப்பின் பதவி உயர்வு பெற தகுதியற்றவராகிறார் என்பது தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய நபருக்கு முறையான பதவி உயர்வு / மறுபணியமர்வு ஆணைகள் வழங்கக் கூடாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும் அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க தலைமைப் பொறியாளர், கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. முறையான பதவி உயர்வு / மறு பணியமர்வு ஆணைகள் பணியிலிருந்து விடுவிப்பு, பதவி உயர்வில் பணியேற்றல் அல்லது பதவி உயர்வு உரிமம் துறப்பு செய்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும், தனியர், பணியேற்ற விவரம் மற்றும் பதவி உயர்வு துறப்பு செய்த விவரம் ஆகியவற்றை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பதவி உயர்வில் பணியில் சேராமல் அல்லது பதவி உயர்வு உரிமை துறப்பு செய்யாமல் எந்த பணியாளர்களையும் தொடர்ந்து அப்பதவியில் நீட்டிக்கக்கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறான நிகழ்வுகளில் அவர்களது பதவி மாற்ற பணி நியமனம் இரத்து செய்யப்படும் எனவும் தெரியப்படுத்தப்படுகிறது.

7. பிற்சேர்க்கையில் காணும் நபருக்கு முறையான தற்காலிக பதவி உயர்வு வழங்கப்படும் முன் இவரது கல்வித் தகுதிச் சான்று மற்றும் தொழில்நுட்ப கல்வித் தகுதி சான்றுகளை சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பி அவரது சான்றுகளை உண்மைத் தன்மை வாய்ந்ததா என்பதற்கான சான்று பெறுமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பிற்சேர்க்கை

கு. திருமாறன்,

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,(ம)

தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.

## உறுப்பினர்கள் கவனத்திற்கு

பட்டயம் பயின்ற 23 பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டது. ஆனால் இன்னும் சிலர் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்து கருத்துரு அனுப்பியிருக்கிறார்கள். எனவே அவர்கள் விருப்ப கருத்துருவை வரைவாளர் பதவிக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். தொழில்நுட்ப உதவியாளர் பதவிதான் வேண்டும் என்றால் புதிய பதவிகள் உருவாக்க சற்று காலதாமதம் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பொதுச் செயலாளர்

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),அலுவலகம், பொபது.,
சேப்பாக்கம், சென்னை-5.

பிற்சேர்க்கை

பதவி மாற்றம் மூலம் தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) பதவி உயர்வு ஒதுக்கீடு விபரம்

| வஎண் | பெயர் | பிறந்த தேதி | பதவி | பணிபுரியும் அலுவலகம் | ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | ஆர்.ஜி. மணிவேலன் | 02.06.1964 | பணி ஆய்வாளர் தரம்–2 | கட்டட (க(ம)ப) உபகோட்டம், மருத்துவப் பணிகள், திருவாரூர் | தரக்கட்டுப்பாடு உபகோட்டம், தஞ்சாவூர். |
| 2 | சத்தியமாலா ரமேஷ் | 09.02.1970 | பணி ஆய்வாளர் தரம்–2 | தரமணி உபகோட்டம், சென்னை–113. | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், தஞ்சாவூர் |
| 3 | தி. குணசேகரன் | 01.07.1967 | பணி ஆய்வாளர் தரம்–2 | தரமணி உபகோட்டம், சென்னை–113. | ஏரிகள் நவீனப்படுத்தும், உபகோட்டம், திருவண்ணாமலை |
| 4 | எம். செல்வம் | 16.03.1965 | பணி ஆய்வாளர் தரம்–2 | தலைமைச் செயலகம், உபகோட்டம், சென்னை–9. | சிறப்பு திட்ட உபகோட்டம், சென்னை |
| 5 | சு. பரந்தாமன் | 26.05.1971 | பணி ஆய்வாளர் தரம்–2 | கூவம் வடிநில உபகோட்டம், சென்னை–5. | மத்திய பெண்ணையாறு வடிநில உபகோட்டம், செய்யார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | தி. பாபு | 31.05.1971 | பணி ஆய்வாளர் தரம்–2 | கட்டட (க(ம)ப) கோட்டம், கடலூர். | சிறப்பு திட்ட உபகோட்டம் எண்.4 பொள்ளாச்சி |
| 7 | கே. நாராயணசாமி | 21.04.1975 | பணி ஆய்வாளர் தரம்–2 | கட்டட (க(ம)ப) கோட்டம், கடலூர் | மேல்பெண்ணையாறு வடிநில உபகோட்டம், ஆரூர். |
| 8 | ஏ. குமார் | 07.03.1970 | ஓட்டுநர் | கொள்ளிட வடிநில உபகோட்டம் சிதம்பரம் | கொள்ளிட வடிநில உபகோட்டம், சிதம்பரம் |
| 9 | பொ. சாமிநாதன் | 04.06.1958 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், ஜெயங்கொண்டான் | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், பெரம்பலூர். |
| 10 | சி. சின்னதம்பி | 04.01.1962 | பணி ஆய்வாளர் தரம்–2 | வடிகால் உபகோட்டம், பட்டுக் கோட்டை | காவிரி வடிநில உபகோட்டம், தஞ்சாவூர் |
| 11 | க. போஸ் | 02.05.1963 | பணி ஆய்வாளர் தரம்–2 | பெரியார் பிரதான கால்வாய் உபகோட்டம்–1, மேலூர் | சிறப்பு திட்ட உபகோட்டம், திருப்பத்தூர் |
| 12. | பூ. இரத்தினசாமி | 07.05.1963 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், ஜெயங்கொண்டான் | தரக்கட்டுப்பாடு உபகோட்டம், திருவாரூர். |
| 13 | வை. அருள் | 20.05.1965 | பணி ஆய்வாளர் தரம்–2 | சரபங்கா வடிநில உபகோட்டம், ஆத்தூர் | தரக்கட்டுப்பாடு உபகோட்டம், சேலம் |
| 14 | ஆர். சுதாகர் | 15.06.1965 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், கோவை |
| 15 | எம். சேகர் | 23.03.1966 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், திருவாரூர் |
| 16 | இரா. ஆனந்தகுமார் | 05.06.1967 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | சிறப்பு திட்ட உபகோட்டம், இளையான்குடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | ஏ.எம். சுந்தரன் | 06.06.1968 | பணி ஆய்வாளர் தரம்–2 | நந்தியாறு வடிநில உபகோட்டம், திருத்தணி | ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், ஆரணி |
| 18 | த. படைகாத்தன் | 09.06.1969 | பணி ஆய்வாளர் தரம்–2 | மருதையாறு வடிநில உபகோட்டம், பெரம்பலூர் | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், திருச்சி |
| 19 | இரா. கௌதமன் | 25.07.1970 | பணி ஆய்வாளர் தரம்–2 | வெள்ளாறு வடிநில உபகோட்டம், மன்னார்குடி | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், திருத்துறைபூண்டி |
| 20 | எம். செந்தில் | 09.05.1977 | பணி ஆய்வாளர் தரம்–2 | குடகனாறு உபகோட்டம், வேடசந்தூர் | சிறப்பு திட்ட உபகோட்டம், எண்.1 பொள்ளாச்சி |
| 21 | வே. ராமன் | 16.08.1979 | பாசன உதவியாளர் | கொள்ளிட வடிநில உபகோட்டம், கீழணை | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், கும்பகோணம் |
| 22 | இரா. ரவிக்குமார் | 09.12.1964 | பணி ஆய்வாளர் தரம்–3 | கட்டட (கு(ம) உபகோட்டம்,–2, தஞ்சாவூர் | சிறப்பு திட்ட வடிவமைப்பு உபகோட்டம், தஞ்சாவூர் |
| 23 | எம். வெங்கடேசன் | 05.06.1968 | பணி ஆய்வாளர் தரம்–3 | அரியாறு வடிநில உபகோட்டம், திருச்சி | காவிரிவடிநில உபகோட்டம், மயிலாடுதுறை |

கு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,(ம)
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது.
/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்

# இயங்கும் உலகம்

**சென்னை கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளை புத்தாண்டு சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் 02.01.2016 அன்று பொறியியல் இல்லம் சி.ப.சண்முகம் அரங்கில் நடைபெற்றது.

சென்னை கிளை தலைவர் பொறியாளர் எஸ். சண்முகானந்தன் கூட்டத்திற்கு தலைமை ஏற்க அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் எஸ். கண்ணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே தொடங்கியது.

கூட்டத்திற்கு அனைத்து மையச்சங்க பொறுப்பாளர்களும் மூத்தப் பொறியாளர்கள் தியாக செம்மல் சி.ப.சண்முகம், பொறியாளர் ஆர். வெங்கடசுப்பு, பொறியாளர் தி.ப.பாலசுப்ரமணியன், பொறியாளர் ஆர்.கே. சுந்தரம், பொறியாளர் என். கிருஷ்ணமூர்த்தி, பொறியாளர். ஜி. பாலசுப்ரமணியன் மற்றும் ஓய்வு பெற்ற பொறியாளர்களும், சென்னை கிளை உறுப்பினர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டார்கள்.

சென்னை கிளை தலைவர் உரையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மையச்சங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். மேலும், உரிய காலத்தில் சங்கத்தின் 2016-க்கான நாட்காட்டி மற்றும் நாட்சுவடியை வெளியிட உறுதுணையாக இருந்த மையச்சங்க பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டார்கள். செயலாளர் பொறியாளர் . ஏ. மணிமாறன் கிளை நிதி நிலை அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

2016-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடியினை தியாக செம்மல் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்கள் வெளியிட அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன் அவர்களும், நாட்காட்டியை பொறியாளர் தி.ப. பாலசுப்ரமணியன் அவர்கள் வெளியிட வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கே.கருப்புச்சாமி அவர்களும், நூற்றாண்டு விழா குறுந்தகட்டினை பொறியாளர் ஆர்.வெங்கடசுப்பு அவர்கள் வெளியிட நிதிச் செயலாளர் பொறியாளர் கே. கமால்தீன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். மூத்தப் பொறியாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்

உறுப்பினர்கள் அனைவருக்கும் 2016-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி வழங்கப்பட்டது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உரையாற்றினார்கள். இந்த ஆண்டு சங்கம் பல்வேறு சாதனைகளை செய்துள்ளது எனவும் அதற்கு காரணம் பொதுச் செயலாளர் சங்கத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு கடுமையாக உழைப்பதுதான் காரணம் என்றும் கூறினார். உறுப்பினர்கள் சந்தேகங்களுக்கும் விபரமாக பதிலளித்தார். கிளை இணைச் செயலாளர் கே. ஆதிச் செல்வி நன்றியுரைக்குப்பின் மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. தமிழகத்தில் வெள்ளம் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்புபணி மற்றும் பராமரிப்பு பணிகளை திறமையாக செயலாற்றிய அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் சென்னை கிளை மனமார பாராட்டு மற்றும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறது.
2. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள கோப்புகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மையச் சங்கத்தை செனனை கிளை கேட்டுக் கொள்கிறது.
3. கிளையின் சேமிப்பு கணக்கில் உள்ள தொகையினை நிரந்தர வைப்புநிதியாக ஒரு வருட காலத்திற்கு வைக்க தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

# பொங்கும் நிதி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளையின் உறுப்பினர் பொறியாளர். V.மாரிமுத்து, உதவி செயற்பொறியாளர் அவர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது குடும்பத்திற்கு குடும்ப நலநிதித் தொகையாக ரூ. 50000/- க்கான வரைவோலை தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளையின் செயலாளர் பொறியாளர் K. சிவக்குமார், உறுப்பினர் சந்திரா, ஆகியோர்களால் வழங்கப்பட்டது.



Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.



# மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நாள் : 13.02.2016, சனிக்கிழமை
காலை 10.30 மணி

இடம் : ஹோட்டல் சத்யம்
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி எதிரில்
பேருந்து நிலையம் அருகில்
புதுக்கோட்டை - 1.

மையச் சங்க பொறுப்பாளர்கள், கிளைச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொறி. எஸ். கண்ணன்**
**- செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்**

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 05-01-2016
Postng on 08-01-2016

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312